(497)

உதவிசெயற்பொறியாளர்(வே.பொ)பொ திருப்பூர் அவர்களின் செயற்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்: திரு.ஆர்.ராஜேந்திரன்,பி.இ.(விவ), எம்.பி.ஏ.,

செ.மு.எண். அ/ 566 /2019 நாள் 19.8.2019

பொருள் : பணிக்குழு – தமிழ் நாடு அமைச்சுப்பணி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி – 4–இல் அடங்கிய பணிகள் – நேரடி போட்டித் தேர்வு 2015–2016, 2016 – 2017 மற்றும் 2017–2018 ஆம் ஆண்டில் ப. அழகேஸ்வரி, தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டது – 15.03.2019 முற்பகல் தட்டச்சர் பணியில் சேர்ந்து கொண்டது – 15.03.2019 முற்பகல் பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1) அரசாணை நிலை எண் 191, பொதுத்துறை நாள் 01.02.1962
2) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் சென்னை–3 அவர்களின் கடித எண் 1692/PSD-A/2019 நாள் 20.02.2019.
3) சென்னை – 5 வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பமே) அவர்களின் செயல்முறை ஆணை எண் அநிபி3/7551/2019–1 நாள் 01.03.2019.
4) தலைமைப் பொறியாளர்(வே.பொ) சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண் அப2/7748/2019 நாள் 06.03.2019.
5) செயற் பொறியாளர் (வே.பொ) திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணை எண் அ/784/2019 நாள் 15.03.2019.
6) தலைமைப் பொறியாளர்(வே.பொ) சென்னை அவர்களின் கடிதம் எண் அப2/8448/2019 நாள் 14.08.2019.

-:oOo:-

**உத்திரவு**

பார்வை (2) மற்றும் (3) கண்டுள்ள செயல்முறை ஆணைகளின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018 ஆம் ஆண்டு தொகுதி – 4–இல் அடங்கிய பணிகளுக்கான நேரடி போட்டித் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பார்வை (4)–இல் காணும் செயல்முறை ஆணையின்படி திருப்பூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து, பார்வை (5)–இல் காணும் செயற் பொறியாளர் (வே.பொ) திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி தட்டச்சராக இவ்வலுவலகத்திற்கு பணிநியமனம் செய்யப்பட்ட . திருமதி. ப. அழகேஸ்வரி, அவர்கள் தட்டச்சராக 15.03.2019 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (1) காணும் அரசாணையில் தேர்வாணையம் மூலம் பணியமர்த்தப்பட்ட அமைச்சுப்பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்ய ஓராண்டு கழிய வேண்டும் என்ற நிர்பந்தம் தேவையில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், மற்றும் (6)–இல் காணும் தலைமைப் பொறியாளர்(வே.பொ) சென்னை அவர்களின் கடிதத்தில் இவர் இப்பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதலே வரன்முறை படுத்தலாம் என தெரிவித்துள்ளதாலும் இவர் தட்டச்சராக அரசுப் பணியில் சேர்ந்த நாளான 15.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination - IV for the year 2015-16, 2016-17 and 2017-18 recruitment".

இப்பணியாளர் பணிவரன்முறை செய்த நாளிலிருந்து மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவத்தினராக வைத்து ஆணையிடப்படுகிறது.

இவருக்கு தகுதிக்காண் பருவம் முடித்தவுடன் இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவர் ஆவார் என உத்தரவிடப்படுகிறது.
மேலும் இவ்வுத்தரவு தகுதி வாய்ந்த அலுவலரால் வழங்கப்படுகிறது எனவும் சான்றளிக்கப்படுகிறது.

உதவி செயற்பொறியாளர்(வே.பொ)பொ
திருப்பூர்

பெறுநர்
திருமதி. ப. அழகேஸ்வரி தட்டச்சர், இவ்வலுவலகம்.

நகல்: தலைமைப்பொறியாளர்(வே.பொ) சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல்: கண்காணிப்புப்பொறியாளர்(வே.பொ) கோவை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல் – செயற் பொறியாளர் (வே.பொ) , திருப்பூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல் – இருப்புக்கோப்புக்கு.